DEPOSITION OF WITNESS

(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE)
IN THE COURT OF FAST TRACK COURT(ML), THENI

**STC No. 49/2025**

Deposition of Witness: PW1 – முகமது ஆசிப்கான், த/பெ. ஜமாலுதின்

நாள்: 26.02.2026.

(புகார்தாரர் ஆஜர். புகார்தாரர் வழக்கறிஞர் ஆஜர். எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டது.)

**சாட்சி மனுவின் பேரில் அழைக்கப்பட்டு எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:**

1. எனது புகாரிலும், நிரூபண வாக்கமூலத்திலும் சொல்லியுள்ள விபரங்கள் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். எதிரியை எத்தனை வருடங்களாக தெரியும் என்றால் நான் மெடிக்கல் வைத்துள்ளேன் எனது மெடிக்கலுக்கு எதிரி மருந்து வாங்க வந்துசெல்வார் அதன்மூலம் அவரை 4–5 வருடங்களாக தெரியும். எதிரி ஆசிரியர் என்பதால் நான் அவரிடம் படித்துள்ளேனா என்றால் இல்லை. எதிரிக்கு நான் எந்த இடத்தில் வைத்து ரூ.17,00,000/– கொடுத்தேன் என்றால் எனது மெடிக்கல்லில் வைத்துதான் கொடுத்தேன் எதிரி காசோலையை எனது மெடிக்கலில்லை வைத்துதான் கொடுத்தார். எதிரிக்கு ஒரே தொகையாக கொடுத்தேனா என்றால் ஆமாம், 20.05.2024 அன்று கொடுத்தேன்.

2. நான் வருமான வரி செலுத்திவருகிறேனா என்றால் இல்லை. எங்களது மெடிக்கல் ஷாப்பிற்கு GST செலத்துகிறேனா என்றால் இல்லை. எதிரி என்னிடம் எப்போது கடன் கேட்டார் என்றால் எதிரி ஒரு மாதத்திற்கு முன்னரே என்னிடம் கேட்டுவந்தார், நான் என்னிடமிருந்த தொகையும் எனது உறவினர்களிடமிருந்து தொகையும் ஏற்பாடு செய்து 20.05.2024 அன்று கொடுத்தேன். நான் யார் யாரிடம் எவ்வளவு தொகை ஏற்பாடு செய்தேன் என்று எனது புகாரிலும், முதல் விசாரனை வாக்குமூலத்திலும் சொல்லவில்லை என்றால் சரிதான். 20.05.2024 ற்கு முன்பு எதிரிக்கும் எனக்கும் வரவு செலவு இருந்ததாக என்றால் இருந்தது. ரூ.30,000/– அல்லது ரூ.40,000/– என்னிடம் கேட்பார் நான் கொடுப்பேன் அந்த தொகையை அவர்

சொன்ன தேதியில் திருப்பி செலுத்திவிடுவார். அவ்வாறு செலுத்தும்போது பணமாகவும் கொடுப்பார் அல்லது Phone pe, gpay மூலமும் கொடுப்பார்.

3. எதிரிக்கும் எனக்கும் இடையே 20.05.2024 ற்கு பிற்கு எந்த வரவு செலவும் இல்லை என்றால் சரிதான். எதிரி அறிமுகம் செய்து வேறு நபருக்கு நான் பணம் கொடுத்துள்ளேனா என்றால் இல்லை. சின்னமனூரை சேர்ந்த மனோகரன் என்பவரை தெரியுமா என்றால் தெரியும். அவர் எவ்வாறு எனக்கு தெரியும் என்றால் எதிரி மூலமாக தெரியும். தாரணி சென்ட்ராயன் என்பவரை தெரியுமா என்றால் தெரியாது. காசோலை திருப்பப்பட்ட நாள்முதல் தற்போது வரை எதிரிமீது காவல் துறையில் புகார் கொடுத்து நடவடிக்கை ஏதும் எடுத்தேனா என்றால் இல்லை. போடி வ.உ.சி. நகரை சேர்ந்த பாலகிருஷ்ணன் என்பவரை தெரியுமா என்றால் தெரியாது.

4. எதிரியை எனக்கு 5 வருடமான தெரியும் என்று சொல்லும் நிலையில் எதிரிக்கு ரூ.17,00,000/– த்தை அவரால் திரும்ப செலுத்த முடியுமா அல்லது முடியாதா என்ற நிலை தெரியாமல் நான் அவருக்கு கடன் கொடுத்துள்ளேனா என்றால் எதிரி என்னிடம் School treasury மூலமாக கடன் கேட்டதாக அது 2 மாதத்தில் கிடைத்துவிடும் என்று கூறியதால் கொடுத்தேன். எதிரியிடம் வழக்கு காசோலையை தவிர்த்து வேறு எதுவும் ஆவணம் பெற்றுள்ளேனா என்றால் இல்லை. எதிரி என்னிடம் வாங்கிய ரூ.17,00,000/– த்திற்கு அவர் வட்டியுடன் சேர்த்து ரூ.40,00,000/– செலுத்தியுள்ளார் என்றால் சரியல்ல. நான் எந்த இடத்தில்வைத்து பணம் கொடுத்தேன் என்று எனது அறிவிப்பிலும், புகாரிலும், நிரூபன வாக்குமூலத்திலும் சொல்லவில்லை என்றால் சரிதான். ஒரே காசோலையில் ரூ.17,00,000/– பூர்த்தி செய்து கொடுக்கலாம் என்றால் சரிதான், அவ்வாறு இருக்கும்பட்சத்தில் எதிரியிடமிருந்து 2 காசோலைகள் பெறுவதற்கு என்ன காரணம் என்றால் எதிரிதான் 2 காசோலைகள் கொடுத்தார் நான் கேட்கவில்லை.

5. தாவா கடனுக்கு முன்பாக எதிரி என்னிடம் பெற்றதாக சொல்லும் கடன்கள் அவர் காசோலை மூலம் என்னிடம் செலுத்தியுள்ளாரா என்றால் இல்லை. எதிரி எனக்கு 13.04.2022 முதல் 31.05.2024 வரை வெவ்வேறு தேதிகளில் எதிரி எனக்கு ரூ.4,72,000/– செலுத்தியுள்ளார் என்றால் சரிதான். மனோகரன் என்பவரது கனரா வங்கி சின்னமனூர் கிளை வங்கி கணக்கிலிருந்து எனது வங்கி கணக்கிற்கு 29.01.2024, 21.05.2024, 11.06.2024 ஆகிய தேதிகளில் மொத்தம் ரூ..50,000/– அனுப்பப்பட்டுள்ளது

என்றால் எனக்கு அது பற்றி ஞாபகம் இல்லை. அதே போல் தாரனி சென்ட்ராயன் என்பவரது HDFC Bank பெங்களூர் கிளையிலிருந்து 23.01.2024, 23.02.2024, 29.02.2024 ஆகிய தேதிகளில் மொத்தம் ரூ.83,000/- எனது வங்கி கணக்கிற்கு அனுப்பப்பட்டுள்ளது என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. சின்னமனுரை சேர்ந்த மனோகரமன் என்பவர் மூலமும், போடியை சேர்ந்த பாலமுருகன் என்பவரது மூலமும் எதிரியும் சேர்ந்து மீதம் உள்ள ரூ.34,00,000/- த்தை என்னிடம் நேரடியாக செலுத்தியுள்ளார் என்றால் சரியல்ல.

6. நான் சொல்வது போல் 20.05.2024 ம் தேதியன்று எதிரி என்னிடம் காசோலை கொடுக்கவில்லை என்றால் தொகையும், கையெழுத்தும் பூர்த்தி செய்து கொடுத்தார் தேதி பூர்த்தி செய்து கொடுக்கவில்லை. தேதியை யார் பூர்த்தி செய்தது என்றால் எதிரியிடம் கேட்டு நான்தான் பூர்த்தி செய்தேன். எதிரிக்கு நான் அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு மற்றும் புகாரில் சொல்லியுள்ள முகவரி எதன் அடிப்படையில் கூறியுள்ளேன் என்றால் எதிரி என்னிடம் அவருக்கு சொந்தமான இடத்தின் பத்திரத்தின் நகலை கொடுத்திருந்தார், நான் அதிலிருந்து விலாசத்திற்கு அனுப்பினேன். எதிரியின் வீட்டிற்கு சென்று நான் கடன் தொகையை கேட்கவில்லை என்றால் சரிதான், அலைபேசியில் கேட்டேன்.

7. நான் எதிரிக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு என்ன காரணத்திற்காக திருப்பப்பட்டது என்றால் எனக்கு அது பற்றி தெரியாது. என்னிடம் காட்டப்படும் ம.சா.ஆ.6 திருப்பப்பட்ட அஞ்சலக உறையில் Not known என எழுதியுள்ளது என்றால் சரிதான். 2023 லேயே எதிரி புதிதாக வீடு கட்டி அந்த வீட்டிற்கு குடிபெயர்ந்த விபரம் எனக்கு நன்றாக தெரியும் என்றால் சரியல்ல. நான் எதிரியின் வீட்டிற்கு பலமுறை சென்று வந்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் புகாரில் குறிப்பிட்டுள்ள முகவரி எதிரியின் பழைய முகவரி என்றாலும் எதிரி 2023 லிருந்து அவரது புது முகவரியில் இருந்துவருகிறார் என்றால் எனக்கு தெரியாது.

8. எதிரி எந்த பள்ளியில வேலை செய்து வருகிறார் என்றால் ZKM பள்ளியில் வேலை செய்து வருகிறார். எதிரிக்கு நான் அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு திருப்பப்பட்ட பிறகு எதிரி பணி புரிந்து வரும் பள்ளி முகவரிக்கு நான் அறிவிப்பு ஏதும் கொடுக்கவில்லை என்றால் சரிதான். எதிரியின் முகவரி எனக்கு தெரியும் என்றாலும், அந்த முகவரிக்கு அறிவிப்பு அனுப்பினால் அவர் சட்ட பதிலறிவிப்பு கொடுத்துவிடுவார்

என்ற காரணத்தினால் வேண்டுமென்றே பழைய முகவரிக்கு அனுப்பியுள்ளேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கில் நான் எதிரிக்கு அனுப்பிய சம்மனை அஞ்சலக துறையிலிருந்து எதிரியின் தற்போதைய முகவரிக்கு redirect செய்ததன் மூலம் அவர் நீதிமன்றத்தில் ஆஜாகியுள்ளார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

9. நான் எதிரியிடம கொடுத்த கடன்களை திருப்பி பெற்றுக்கொண்டு அவரை மோசடி செய்ய வேண்டும் என்ற எண்ணத்தில் வழக்கு நடவடிக்கைகள் அனைத்தும் எதரியின் பழைய முகவரியை குறிப்பிட்டு எடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் எனது புகாரில் குறிப்பிட்டுள்ள எனது முகவரிக்கும் எதிரியின் முகவரிக்கும்இடையே எவ்வளவு தூரம் இருக்கும் என்றால் 2 கிலோ மீட்டர் தூரம் இருக்கும். எதிரி எங்கு குடியிருக்கிறார் என்று தெரியாமல் நான் அவருக்கு ரூ.17,00,000/- கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. எதிரி என்னிடம்நம்பிக்கையின் பேரில் கொடுத்த காசோலையை எதிரி கடன் கொடுத்த பிறகு நான் மோசடியாக பூர்த்தி செய்து இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள புகார் சட்டப்படி ஏற்புடையதல்ல என்றாலும் அது தள்ளுபடிக்குரியது என்றாலும் சரியல்ல.

<u>மறுவிசாரணை-</u> இல்லை.

இந்த வாக்குமூலம் என்னால் சாட்சியளிப்பவரின் கூற்றுக்கு இணங்க தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்து என்னால் படித்துக்காண்பித்து சரி என ஒப்புக் கொள்ளப்பட்டது.

AASAY MARUDHU P
Digitally signed by AASAY MARUDHU P
Date: 2026.02.26 19:35:15 +0530

நீதித்துறை நடுவர்,
விரைவு நீதிமன்றம் (நீ.ந.நி)
தேனி.